மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# காடர் இனமக்களும் வாழ்வியலும்

**ச. பாலநாகம்மாள்**
உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை,
கே.ஜி. கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர்

உலகம் உருவாகிப் பல நூற்றாண்டுகள் ஆகிவிட்ட நிலையில் மனித இனத் தோற்றம் பற்றி பலரும் பலவிதக் கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். இருப்பினும் மனித இனத்தின் வாழ்வு முகிழ்த்தபொழுது இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கட்டுப்பாடு அற்ற நிலையில் மனம் போன போக்கிலே வாழ்ந்திருந்தனர். உணவுப் பற்றாக்குறை ஏற்பட்ட காலத்தில் தாமாகவே உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யவும், பிற சக்திகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டி, கூட்டமாக வாழும் சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டனர் என்பதை உய்த்துணர முடிகிறது. இவ்வாறு கூடி வாழ்ந்து அதன், நன்மையை உணர்ந்த மனிதன், இயற்கை வளமிக்க பகுதிகளை தங்கள் வாழ்விடங்களாக அமைத்துக் கொண்டான். இச்சூழலுக்கு ஏற்றவாறு தங்களது வாழ்க்கை நிலையையும் மாற்றி அமைத்து வாழத் துவங்கினார்கள். இவ்வடிப்படையில் கேரளத்தில் பாலக்காடு மாவட்டத்திற்கு உட்பட்ட இயற்கை எழில் கொஞ்சும் சுற்றுலாத்தளமான நெல்லியாம்பதி மலைப்பகுதிகளில் வாழும் "காடர்" என்ற பழங்குடிகளைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பழங்குடிகள்**

பழங்குடிகள் என்ற சுட்டுப்பெயரே அவர்தம் பழமைக்கு விளக்கமாக அமைகிறது. நாட்டில் மிகப் பழங்காலத்திலிருந்தே வசித்து வருபவர்களுடைய வாரிசுகளாக இவர்கள் இன்றும் ஆங்காங்கே வாழ்கின்றனர்.

"பழங்குடி என்னும் பொருளுடைய சொல் முதன்முதலில் எபிரேயர்களைக் குறிக்கப் பயன்பட்டது" (ப-297) என சீ.பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

பழங்குடி என்னும் சொல் தொடக்க காலங்களில் அரசியல் குழுக்கள் அல்லது பிரிவுகள் என்னும் பொருளையும் கொண்டிருந்தது. பழங்குடி என்பதை மஜூம்தார் பின்வறுமாறு வரையறை செய்கிறார்.

> "பொதுவாக பெயரையும், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் தன்மையும், ஒரே மொழியைப் பேசும் இயல்பையும், திருமணம், செய்யும் தொழில் அல்லது பணியில் சில விலக்குகளைக் கொண்டு விளங்கும் தன்மையும் உடையவராய், ஒருவருக்கொருவர் கட்டுப்பாடுடனும், பொருள்களைப் பறிமாறிக் கொண்டும் வாழும் பல குடும்பங்களின் தொகுப்பே பழங்குடியாகும்"(299)

பொதுவாக இக்கருத்துக்கள் ஆதிகால மனித இனத்தைக் குறிக்கப் பழங்குடி என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது என்பதை உணர்த்துகிறது.பண்டைய மனிதர்களின் எச்சங்களாக இயற்கைச் சூழலில் இன்றும் வாழ்கின்ற மக்கள் பழங்குடிகள் என்று பெயர் பெற்றிருக்கின்றனர்.

**காடர் - பூர்வீகம்**

> "காடர் பழங்குடியினர் கேரளாவிலும், தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். கொச்சியின் கிழக்குப் பகுதியிலுள்ள ஏலமலைப் பகுதி, தென்கேரள மலைப்பகுதி ஆகியவற்றிலும், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆனைமலையின் பிரமன்கடவு, பன்னிக்குழி, சவமலை, நெடுங்குன்றம், கருங்குன்றம், அயன்குளம், வாகைமலை ஆகிய இடங்களிலும் இவர்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர்." (ப-59) என வாழ்வியல் களஞ்சயம், தொகுதி -7ல் குறிப்பிடுகின்றனர்.

முற்காலத்தில் கேரளாவில் திருக்கொச்சி என்ற இடத்தில் வாழ்ந்திருந்தனர். காலப்போக்கில் இனப்பெருக்கத்தின் காரணமாகத் தொழில் செய்யவும், தங்களின் அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்யவும் முடியாமல் போன காரணத்தால், பல்வேறு பிரிவினராகப் பிரிந்து சென்றனர். பிரிந்தவர்கள் மங்கல டாம், தழுகக்கல், அட்டப்பாடி, தேக்கடி, குறியார்குற்றி, போன்ற இடங்களுக்குச் சென்று அந்தந்த பகுதிகளைத் தங்கள் பூர்வீகமாக்கிக் கொண்டு வாழ்கின்றனர். காடர் என்பதற்கு,

"ஆனைமலைக்கண் வசிக்கும் ஒருவகைக் காட்டுச்சாதியர். இவர்களுக்கு வேட்டையாடுதல் தொழில், அவற்றுள் யானை வேட்டை முக்கியம். கொச்சி சமஸ்தானத்தருகிலுள்ள குன்றுகளில் வசிக்கும் சாதியர்." (ப -485) என்று விளக்கம்

தருகிறது அபிதான சிந்தாமணி. கேரள மலைப்பகுதிகளில் பெரும்பான்மையான பகுதிகளில் இவ்வினத்தவர்கள் வாழ்கின்றனர். எனினும் இவர்களது பூர்வீகம் தமிழகமே.

> "காடர், இருளர், பளியர், முதுவர், போன்ற பழங்குடியினரும் தங்கள் பூர்வீகமாகத் தமிழகத்தையே குறிப்பிடுகின்றார்கள். (தமிழகப் பழங்குடிகள், ப - 50)

என்னும் கருத்து இங்கு சுட்டத்தக்கது.

**காடர் இனமக்களின் தொன்மை**

காடர் இனமக்கள் தொழில் அடிப்படையிலும், இருப்பிடங்களின் அடிப்படையிலும், நாகரிகத்தின் அடிப்படையிலும் பிற மலையின மக்களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றனர். காடர் என்போர், "காடாஸ்" எனவும் அழைக்கப்படுகின்றனர்.

> "ஆனைமலையில் வாழும் காடர் போன்ற பழங்குடியினர், வரலாற்றுக்கும் முற்பட்டகால இனமக்களின் ஒருதனி வகையினராகவே காணப்படுகின்றார்கள். இந்தியாவிலேயே மிகப் பழமையான பழங்குடியெனக் கருதப்படுபவர்கள் காடர்கள். இத்தகையோர் இம்மண்ணின் தொல்குடி (அபாரிஜின்ஸ்) என்னும் நிலையில் மற்ற பழங்குடிகளிடமிருந்து வேறுபடுகின்றார்கள்"(தமிழகப் பழங்குடிகள் ப-51)

> "கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆனைமலையில் வாழும் காடர்கள்தான் இந்தியாவிலேயே மிகப்பழமையான பழங்குடிகளாவார்" (பழங்குடிகள் ப-104)

சக்திவேலின் கூற்றும் இவ்வினத்தவர் பழமையை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

காடர் இன மக்களின் கூற்றுக்களையும், ஆய்வாளர் கருத்துக்களையும் ஆராயுமிடத்து பழங்குடி மக்களுள் பழமையான இனம் காடர் இனம்தான் என்பது ஐயத்திற்கு இடமின்றி புலனாகின்றது.

**காடர் பற்றி மானிடவியல் அறிஞர் கருத்துக்கள்**

உலகத்தில் மானிடர்கள் ஓர் இடத்தில் உருவாகி உலகின் பல பகுதிகளுக்குப் பரவிச் சென்றனரா அல்லது பல பல பாகங்களிலுமாக உருவாகி வந்தனரா என்ற கருதுகோல் இன்னும் விளக்கப்படவே இல்லை. இந்திய நாட்டில் வாழும் இனத்தவர்களைப்பற்றி ஆராயின் பல வண்ண உருவ மக்களின் தொகுதியாக இந்திய நாட்டு மக்கள் இனத்தைக் காணமுடிகிறது. அதற்குக் காரணம் உலகில் பல பகுதிகளிலிருந்து மக்கள் இந்தியாவிற்குள் வந்து வாழ்ந்தமையே ஆகும்.

இந்தியாவிற்குள் நுழைந்த மிகப்பழமையான மனித இனம் "நீக்ரோ" இனமாகும். தமிழ் மொழியின் கிளை மொழிகளைப் பேசும் சில தென்னிந்திய பழங்குடிகளிடையே நீக்ரோக்களுக்கே உரிய பதிவுகளைக் காணமுடிகிறது. காடுகளில் உறையும், இருளர், காடர், குறும்பர், பளியர், ஆகிய பழங்குடி மக்களிடையே நீக்ரோக்களின் சாயல் காணப்படுவதால் தக்காணத்தில் தென்னிந்தியாவிலும் நீக்ரோ இனம் தேங்கிப் படிந்திருப்பதைத் தெளிவாக உணரலாம்.

"காடர் நீக்ரிட்டோ இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று பி.எஸ்.குகா, கீன் ஆகியோரும் தொன்மை ஆசுத்திரேலியா இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று, தர்சுடன், எரன்பெல்சு, அய்யப்பன்,போன்றோர் கூறுகின்றனர்."(வாழ்வியல் களஞ்சியம் தொகுதி-7 ப-59).

"காடர் நீக்ரோ இனத்தைச் சார்ந்தவர்கள் என்று எட்கர் தர்ஸ்டன் குறிப்பிடுகிறார்.(ப-39).

ஆகவே நீக்ரோ இன மக்களோடு காடர்கள் ஏதோ ஒருவகையில் தொடர்பு உடையவர்களாதல் வேண்டும், என்பது புலனாகிறது.

**வாழ்க்கைச் சூழல்**

மக்கள் வாழும் இடங்களுக்கு ஏற்றவாறு தனிமனித வாழ்க்கையை, மாற்றி அமைத்த, ஒரு சமுதாயமாக வாழத் துவங்கியிருப்பார்கள். அவ்வாறே தங்களுக்கென்று தனிக் கலாச்சாரத்தையும், நாகரிகம் போன்றவற்றையும் அமைத்துக் கொண்டனர். தமிழர்கள் தங்கள் வாழும் இடச்சூழலுக்கு ஏற்றவாறு நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைப் பாகுபாடு செய்து வாழ்ந்தனர் என்பதைத் தொல்காப்பியம் சுட்டுகிறது. இங்ஙனம் ஐந்து வகை நிலங்களிலும் சூழ்நிலைக்கு ஏற்ப, பழந்தமிழர் வாழ்க்கையை அமைத்து வந்தனர் என்பதை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதர் தம் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒரு சக்தி இயற்கையில் உண்டென்று உணர்ந்து கொண்டனர். இயற்கையின் சீற்றத்திற்கு அஞ்சிய அவர்கள் இயற்கையை வழிபடத் துவங்கிய மனிதர் தம் வாழ்விடங்களுக்கு ஏற்றவாறு தொழில் முறைகளுக்கு ஏற்றவாறு, வழிபாட்டு முறைகளை மாற்றிக் கொண்டனர்.

காடர்களைப் பற்றிய ஆய்வின் போது, காடர்களின் வாழ்வானது, குறிஞ்சி, முல்லை, பாலை ஆகிய மூன்று வகைத் திணைகளிலும் அமைந்திருக்கும் பாங்கினை அறிய முடிகின்றது.

**காடர்களின் உருவ அமைப்பு - புறத்தோற்றம்**

காடர்கள் பொதுவாக உயரம் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். 157.7 செ.மீ. சராசரி உயரமும், உட்குழிந்த மார்பு கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். கருமையான நிறமுடைய மேனியைக் கொண்டவர்களாகவும் தோற்றமளிக்கின்றனர். தடித்த உதடும், சுருட்டை முடியும், அகன்ற மூக்கும் கொண்ட இவர்களுள் ஆணும், பெண்ணும் பற்களைச் செதுக்கிக் கூராக்கிக் கொள்ளும் பழக்கமுடையவர்கள் ஆவர். ஊழைப்பாளி மக்களாக இருப்பதால் கட்டான உடலமைப்பு உள்ளவர்களாகவே உள்ளனர். இவர்களைப்போன்றே இரவாளர், மலசர், குறும்பர், இருளர், முதுவர், போன்றோர் காணப்படுகின்றனர். மலைவாழ் மக்களுக்கே உரிய கட்டமைப்பு இவர்களுக்கும் அமைந்துள்ளது.

**ஊர்த் தலைவர்கள்**

பண்டைய குறுநில மன்னர்களைப் பற்றி இலக்கியங்கள் பகருகின்றன. குறுநில மன்னர்களைப் போன்று தலைமைப் பொறுப்புக்களைக் கொண்ட தலைவர்களால் வழி நடத்தப்படும் ஒரு சமூகமாக காடர் இன மக்களின் வாழ்வு அமைந்துள்ளது. இவர்கள் வாழும் ஒவ்வொரு ஊரிலும் மூப்பன், வண்டேரி, வாலதெரி என்ற மூன்று ஊர்த் தலைவர்கள் உள்ளனர். இவர்களில் "மூப்பன்"தான் அனைவருக்கும் தலைவராக விளங்குகின்றார். அதற்கடுத்து வண்டேரியும் அதற்குக் கீழ் வாலதெரியும் இருப்பர். இந்த மூவரின் கட்டுப்பாட்டின் கீழ் ஊர்மக்கள் செயல்படுகின்றனர். இவ்வினத்தின் தலைவராக மூப்பன் மதிக்கப்படுகின்றார்.

**மூப்பன்**

காடர்கள் வசிக்கும் ஒவ்வொரு ஊரிலும் மூப்பன் இருப்பர். இவரே அந்த ஊரில் நடக்கும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் தலைமை வகிப்பவர். திருவிழாக்களை நடத்தி வைப்பதும், அந்த ஊரிலுள்ள ஏதேனும் ஒரு குடியில் திருமணம் மற்றும் சடங்குகள் நடைபெறுமாயின் அங்கு சென்று அந்நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்தி வைக்கும் பொறுப்பும் மூப்பனையேச் சாரும்.

காடர்கள் வாழ்கின்ற ஊரில் ஏதாவது பிரச்சினை என்றால் அதை மூப்பன்தான் தீர்த்து வைப்பார். குற்றம் செய்தவர்களை நன்கு விசாரித்து தண்டனை வழங்குவதும் மூப்பனின் வேலையாகும். மனம் வேறுபட்டு ஒற்றுமையின்றி பிரிய நினைக்கும் தம்பதிகளை நன்கு விசாரித்து அவர்களின் பிரச்சனைக்கு தீர்வு காண்பதும் இவரே. தீர்வு காணாத பட்சம், இருவரையும் பிரித்து வைப்பதும் மூப்பனின் கடமையாகும். இவர்களிடையே மூப்பன் தன் கடமைகளைச் சரிவரச் செய்வது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. கிராமப்புறங்களில் ஊர்மணியக்காரர், ஊர்க்கவுண்டர் என்பவர்களைப் போன்று மூப்பனையும் இம்மக்கள் பெரிதும் மதிக்கின்றனர். மட்டுமின்றி அவர்தம் சொல்லுக்குக் கட்டுப்பட்டும் வாழ்கின்றனர்.

**வண்டேரி, வாலதெரி**

மூப்பனுக்கு அடுத்த நிலையில் வண்டேரி, வாலதெரி என்பவர்கள் பொறுப்புடையவர்களாகின்றனர். மூப்பன் நேரடியாகச் சென்று குடும்பங்களைப் பார்த்து மக்களின் பிரச்சினைகளை அறிய முடியாத காரணத்தால் அவருக்குக் கீழ் உள்ள வண்டேரிதான் பிரச்சினைகளை அறிந்து தீர்த்து வைப்பார். அவரால் பிரச்சினையை தீர்க்க முடியாவிட்டால் மூப்பனிடம் சென்று கூறுவர். பின் மூப்பன் தீர்வு காண்பர்.

ஊருக்குப் புதிதாக யாரேனும் வந்தால் அவர்களை மூப்பனிடம் அழைத்து வந்து அறிமுகப்படுத்துவதும் அவர்கள் வந்த ஊரிலிருந்து திரும்பிச் செல்லும்வரை அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து செயல்படுவதும், வண்டேரிக்கு அடுத்தநிலையில் உள்ள வாலதெரிதான். ஊரில் மரணம் நேர்ந்தால் மரணச்செய்தியை தங்கள் இனமக்கள் அனைவருக்கும் அறிவிக்கும் பொறுப்பு வாலதெரியையே சாரும்.

இந்த மூன்று பதவிகளும் தந்தைவழி மகன் என்ற முறையிலேயே வழங்கப்படுகிறது. வாரிசில்லாத நிலையில் பதவியில் இருப்பவர் தான் விரும்பிய யாருக்கு வேண்டுமானாலும் தன் பதவியை அளிக்கலாம்.

இன்று இப்பதவிகள் பெயரளவிலேதான் காணப்படுகிறதே தவிர, மக்கள் இவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு வாழும் நிலை மாறிவிட்டது. ஆனால் பாலக்காடு மாவட்டத்தில் செருநெல்லியில் உள்ள காடர் இன மக்கள் "மூப்பன்" எனப்படும் தலைவனின் கீழ் செயல்பட்டு வருகின்றனர். இது பண்டைய மக்கள் ஒரு தலைவனின் கீழ் செயல்பட்டு வந்தமையின் எச்சங்கள் என்பது தெளிவு.

## மொழி

காடர் இன மக்கள் தமிழும், மலையாளமும் கலந்த ஒரு திருந்தாத மொழியினையேப் பேசி வருகின்றனர். எட்கர் தர்ஸ்டன் "காடர் திருந்தாத தமிழும், மலையாளமும் கலந்த ஒரு கலப்பு மொழியினைப் பேசுகின்றனர்" (தென்னிந்திய குலங்களும் குடிகளும் ப-12). எனக் குறிப்பிடுகின்றார்.

மலை அடிவாரங்களில் வாழும் மலைவாழ் மக்கள் மற்ற இனத்தோடு கலந்து பழகும் வாய்ப்பு ஏற்படுவதால், அவர்கள் மொழியில் இப்பொழுது அதிகமாக தமிழ்ச்சொற்கள கலந்துள்ளன. இவர்கள் பேசும் மொழிக்கு வரிவடிவம் கிடையாது. "இவர்கள் மலையாளச் சொற்கள் நிறைந்த கொச்சைத் தமிழைப் பேசுகின்றனர்" (பழங்குடிகள் ப-104) "காடர்கள் பேசுவது மலையாளம் கலந்த தமிழின் கிளைமொழி எனக் கருதப்படுகிறது. அண்மைக் கால மொழியியல் ஆய்வின்படி இவர்கள் பேசுவது ஒரு தனிமொழி என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது". (வாழ்வியல் களஞ்சியம் தொகுதி-7 ப-59).

இவர்கள் முதுவர், மலசர் முதலிய பிற மலைவாழ் பழங்குடி இனத்தவர்களைப் போலவே பேசிக்காட்டும் திறமை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். முதுவர், இருளர், குறும்பர், போன்ற பழங்குடியினர் பேசும் மொழிகளைப் போன்றே காடர் இன மக்களின் மொழியும் திருந்தா மொழியாகவே உள்ளது.

## காடர் இன மக்களின் பெயர் வைப்பு முறை

காடர் இனமக்களின் பெயர்கள் பெரும்பாலும் சிறுதெய்வங்களின் பெயர்களாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மாரி, ரங்கன், மாயன், பொன்னன், காளி, வனத்தம்மா, மலைவாழியம்மா, கருப்பன், ரங்கம்மா, நஞ்சன், போன்ற பெயர்களைக் கூறலாம். எனினும் திரைப்படத்தின் தாக்கத்தால் இன்றைய தலைமுறையினர் பெயர்களில் மாற்றம் புகுந்துவிட்டது.

## குடியிருப்பு பகுதிகளின் பெயர்

மலைவாழ் மக்கள் காடுகள், மலைகள் போன்ற இடங்களில் சுற்றித் திரிந்து வாழ்ந்தனர். காடுகளில் விலங்குகளின் பயத்தினால் இவர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தனர். இவர்கள் வாழும் இடங்களை ஊர்கள் என்று குறிப்பிட்டனர். பழந்தமிழர்களும்

இத்தகைய ஊர்களில் வசித்தனர். பண்டைய சங்க இலக்கியங்களில் ஊர் என்னும் அமைப்பு காணப்படுகிறது. செருநெல்லிவாழ் மக்களும் தங்கள் வசிக்கும் பகுதியை ஊர் என்று குறிப்பிடுகின்றனர். "ஊர் என்ற சொல்லிற்கு நாடு, நகர், தேசத்தின் உட்பிரிவு, இடம், ஊரில் உள்ளார், இருக்கை, உறையுள், காடு, காண்டவம், குண்டம், குடி, சேரி, பட்டினம், புதி, வேலிவைப்பு, நொச்சு, பட்டி, பட்டு, பள்ளி, நூறு குடியுள்ள இடத்தின் பெயர்" எனப் பல பொருள்களைத் தருகிறது தமிழ் அகராதி.

கேரள அரசு இவர்களுக்கெனக் காலனி அமைத்துக் கொடுத்து, தனி இடம் ஒதுக்கி அவர்களுக்கென வீடுகள் அமைத்துக் கொடுத்திருக்கிறது. தற்போது இவர்கள் வாழும் குடியிருப்புப் பகுதி "காலனி" என்று பெயர் பெறுகின்றது. காலனி என்பது ஆங்கிலச் சொல்லாகும்.

**சங்க காலத்தில் ஊர் என்ற அமைப்பு**

சங்க இலக்கியங்களில் ஊர் என்ற சொல்லாட்சி பரவலாகக் காணப்படுகிறது. புறநானூறு, சிறுபாணாற்றுப்படை, குறுந்தொகை, போன்ற சங்க இலக்கியங்களில் ஊர் என்ற சொல்லாட்சி மக்கள் சேர்ந்து வாழும் பகுதியையே குறிக்கிறது.

"குன்றுபின் ஒழீயபோகி உரந்து ஞாயிறு படினும் ஊர் சேய்த்து எனாது"

(அகநாநூறு பாடல்-9)

"வான் உட்கும் வடிநீன் மதில் முல்லன் மூதூட் வயவேந்தே"

(புறநாநூறு பாடல்-18)

என்ற தொடர்களில் ஊர் என்ற சொல் இடம் பெறுவதைக் காணலாம். அது மக்கள் திரளாக வாழ்ந்த சமுதாய அமைப்பினைக் காட்டியது என்பது புலனாகிறது. மலைவாழ் மக்கள் காடுகளிலும், குகைகளிலும் வாழ்ந்து வந்தனர். இவ்வாறு வாழ்ந்தவர் நெல்லியாம்பதியில் உள்ள செருநெல்லி என்ற இடத்தில் "காலனிகளில்" தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர்.

**இருப்பிடம்**

காடுகளில் உள்ள மரக்கிடங்குகளில் வரிசையாக அமைக்கப்பெற்ற குடிசைகளில் காடர் குடியிருக்கின்றனர். புல்லரிவாளால் மூங்கில்களை நெடுகப் பிளந்து அமைக்கப்பட்ட அக்குடிசைகளிள் தேக்கிலைகளாலும், மூங்கில்களாலும், புல்லாலும் வேயப்பட்டு காணப்படுகின்றன. சிறு குழுக்களாக வாழும் காடர்கள் ஓரிடத்தில் தங்கி வாழும் இயல்பினரல்லர். பழங்காலத்தில் தங்கள் இருப்பிடத்தை காட்டிற்குள்ளேயே அடிக்கடி மாற்றிக் கொண்டிருந்தனர். தற்போது இவ்வாறு இருப்பிடத்தை மாற்றுவதில்லை.

காடுகளில் அலைந்து திரியும்பொழுது, இலைகளால் வேயப்பெற்ற எளியதொரு குடிசையை அமைத்துக்கொண்டு அதன் அருகே யானை, புலி, கரடி, சிறுத்தை ஆகியன நெருங்காதிருக்க நெருப்பினை இரவு முழுவதும் தொடர்ந்து தணிய எரியும்படி விடுகின்றனர். கூரை மேய்வதற்கு புற்களைப் பயன்படுத்தும் தன்மை சங்ககால குறிஞ்சி நில மக்களிடம் காணப்பட்டது,

"அகலுளாங்கட் கழிமிடைந்து இயற்றிய புல்வேய் குரம்பை குடிதொறும் பெறுக்குவீர்"
(பாடல்-438)

என்ற மலைப்படுகடாம் வரிகளுக்கு நச்சினார்க்கினியர், அவ்விடத்து அகன்ற ஊரிடத்துக் கழிவுகளால் நெறிப் பண்ணின புல்லான் வேய்ந்த குடிகளிலிருக்கும் குடிகளிடந்த தோறும் பெறுகுவீர் என்று உரை தருகிறார்.

**உணவு முறைகள்**

மனிதன் உயிர் வாழ இன்றியமையாத பொருட்களில் முதன்மையானதும் அடிப்படையானதும் உணவே ஆகும். ஆதிகால மனிதன் காடு, மலைகளில் அலைந்து திரிந்து இயற்கையாகக் கிடைத்த உணவுப் பொருட்களை உண்டு தன் பசியை ஆற்றிக் கொண்டான். அந்நிலையில் அவ்வுணவு பெரும்பாலும் சைவமாகவே இருந்திருக்கும். காய், கனி, கிழங்கு, தேன் என்று இயற்கையில் கிடைத்தவை உணவாக அமைந்தன. ஆகவே மக்களின் உணவுப் பழக்கவழக்கங்களில் சைவ உணவு வகைகளே முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளன என்றும் கருத வேண்டியுள்ளது.

காட்டு கிழங்குகள், பலாப்பழம், சேம்புக்கிழங்கு, தேன், போன்றவைகள் இவர்களது முக்கிய உணவுப் பொருட்களாகும். கிழங்கு வகைகளைத் தோண்டி எடுத்து உண்பது தமிழகத்தில் மக்கள் பழங்காலந்தொட்டே மேற்கொண்ட வழக்கமாகும். இயற்கை அன்னையின் அற்புதப் படைப்புகளில் சுவைமிக்க கனிவகைகளும் முதன்மை பெறுகின்றன. பலவகை கனி வகைகளை உண்டு வந்த காடர் பலாப்பழத்தின் மீது அதிக நாட்டமுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

**செயற்கை உணவு வகைகள்**

ஆதிகாலம் தொட்டே மனித உணவில் காய்கறி, பழங்களோடு, விலங்குகளின் மாமிசமும் நீங்கா இடத்தைப் பெற்றுள்ளது. காடர் இனமக்களும் மான், முள்ளம்பன்றி, காட்டெலி, காட்டுப்பன்றி, குரங்கு, காட்டுமுயல் போன்றவற்றை வேட்டையாடி உணவாகக் கொள்கின்றனர். தற்காலத்தில் அரசாங்கத்தில் வனத்துரையினரின் மிருகவதைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடுமையான தண்டனை வழங்குவதன் காரணமாக இவர்கள் விலங்குகளை வேட்டையாடுவதில்லை.

**தானியங்கள்**

பழங்குடி மக்கள் சாமை, வரகு, கீரை, ராகி, சோளம், கம்பு, போன்ற தானியங்களையும் உணவாக உட்கொள்கின்றனர். தானிய உற்பத்தி தற்போது குறைந்து விட்ட காரணத்தினால் வெளி உலகத்தொடர்பால் அரிசி கிடைப்பதாலும் அரிசி உணவையும் உட்கொள்கின்றனர். காட்டுக் கிழங்கையும் தேனையும் விரும்பி உண்கின்றனர். மலைக் காடுகளில் இவை அதிகமாகக் கிடைப்பது இவர்களுக்குப் பயனுள்ளதாக உள்ளது.

காடர் இன மக்கள் உடும்பு, ஈசல், காட்டுமுயல் போன்ற உயிரினங்களையும் இறைச்சியையும் விரும்பி உண்கின்றனர். இச்செயல் சங்க கால வேட்டுவரின் உணவு பற்றிய "உடும்பு கொணீ வரிநுணல் அகழ்ந்து" என்ற பாடலை நினைவுபடுத்துகின்றது. மேலும் சங்ககால மக்களைப் போன்று திருவழாக் காலங்களில் மது அருந்துவது முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்றது.

தற்காலத்தில் நாட்டில் வாழும் மக்களின் உணவு முறையை பின்பற்றுகின்றனர். உணவுக்கு வழி இல்லாத போது நாட்டு மக்கள் வாடுவதைப் போல காட்டில் வாழும் மக்கள் வருந்தத் தேவையில்லை. காட்டில் கிடைக்கும் உண்பதற்கு உகந்த கிழங்குகளையும், கனிவகைகளையும், தேனையும் உண்டு பசியாறி வருகின்றனர்.

**உடைகளும் அணிகலன்களும்**

"உண்பவை நாழி, உடுப்பவை இரண்டே" என்பது முதுமொழி. இதற்கேற்ப எளிய முறையில் காடர் இன மக்கள் ஆடையை அணிந்துள்ளனர். பொதுவாக பழங்காலத்தில் இலை தழைகள், மரப்பட்டைகள் போன்றவற்றை அணிந்திருந்த இவர்கள் நாகரிக வளர்ச்சியால் இன்று பிற மக்களைப் போன்று ஆடைகளை அணிகின்றனர். முதியவர்கள் மட்டும் வேட்டியும் மேலே துண்டும் அணிந்துள்ளனர்.

ஆண்கள் தங்கள் காது மடல்களில் பித்தளையிலான அணிகளை அணிவதோடு, மூக்கினைக் குத்தி அத்துளையில் மரக்குச்சியினையும் அணிகின்றனர். பெண்களின் காது மடல்களில் பெரிய துளைகளிட்டு அவற்றில் பனை ஓலையினாலான சுருள்களையோ, கனமான மரத்தால் செதுக்கப்பட்ட வட்டுகளையோ அணிவர். காதணிகள், பித்தளை அல்லது உருக்காலான வளையல்கள், மோதிரங்கள், பாசிமணி மாலைகள் ஆகியவற்றையும் பெண்கள் அணிகின்றனர். வறுமை காரணமாக தங்க நகைகளை இவர்களால் அணிய முடியவில்லையே தவிர தங்க நகைகளை இவர்கள் விரும்பவில்லை எனக் கூறமுடியாது.

இளவயது பெண்கள் சேலை உடுத்தி உள்ளனர். நவீன உடைகளைப் பெரும்பாலும் காண முடிவதில்லை. இவர்கள் தமிழகச் சாயல் பெற்று தாவணியும் அணிந்துள்ளனர். உடைகளைப் பொருத்தமட்டில் பழங்குடி மரபு மங்கி வருகிறது.

**தொழில்கள்**

விலங்கெனத் திரிந்த ஆதிகால மனிதன் நிலையான ஓர் இடத்தில் வசிக்க வேண்டிய நிலையை உருவாக்கிக் கொண்ட போது, தொழில்களின் இன்றியமையாமையும் ஏற்பட்டது. மனிதன் தான் வாழும் சூழலுக்கேற்ப அவனது தொழிலையும் அமைத்துக் கொள்கிறான்.

காடுகளில் வாழும் காடர் இன மக்கள் தேனெடுத்தல், மரம்வெட்டுதல், கிழங்கு வகைகளைத் தோண்டி எடுத்தல், மூலிகைவேர்களை அகழ்ந்தெடுத்தல் போன்ற பல்வேறு தொழில்களைச் செய்கின்றனர். இத்தொழில்களைத் தங்கள் குழந்தைகள் கற்றுக்

கொள்வதற்காக தேன் எடுக்கவும், கிழங்குகளைத் தோண்டவும் செல்லும் பொழுது தங்கள் பிள்ளைகளைத் தங்களுடன் அழைத்துச் செல்கின்றனர். பெற்றோர் தொழிலைக் குழந்தைகள் கற்றுக் கொள்ள வாய்ப்பாக அமைகின்றது.

**தேன் எடுத்தல் தொழில்**

காடர் இன மக்களின் தொழில்களில் முக்கியமானதாகத் தேன் எடுத்தல் கருதப்படுகிறது. குறும்பர் இனமக்களும் இத்தொழிலைக் குலத்தொழிலாகக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது "காடர் மரம் ஏறுவதையும் தேன் எடுப்பதையும் குலத்தொழிலாகக் கொண்டிருந்தனர்". (பழங்குடிகள் ப-105) "காடர் நிலா வெளிச்சமில்லாத இருண்ட இரவுகளிலேயே தேன் கூடுகளை அகற்றுவர். நிலவு வீசும் இரவிலோ, பகலிலோ அப்பணியில் ஈடுபடமாட்டார்கள்" (தென்னிந்திய குலங்களும் குடிகளும் ப-19). தேனை உணவாக உட்கொள்ளும் இவர்கள் தேவைக்கு அதிகமானவற்றை விற்கின்றனர்.

**பிற தொழில்கள்**

தற்காலத்தில் குருமிளகு பயிர் செய்கின்றனர். மிளகோடு காட்டில் உள்ள கன்னிமாங்காய், சோளப்பாக்குப் பூ, ஜாதிபத்திரி பூ, போன்றவற்றை விற்பனை செய்து பதிலுக்குப் பணமோ, அரிசியோ, பெற்றுக்கொள்கின்ளனர். சோளப்பாக்குப் பூ, ஜாதிபத்திரி பூ, போன்றவை மருந்து பொருள் தயாரிக்கவும், ஊறுகாய் தயாரிப்பதற்கும், வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கும் பயன்படுகின்றன. "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்ற முதுமொழிக்கேற்ப பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்கின்றனர். என்னதான் பொருளீட்டினாலும் இவர்களிடையே சேமிக்கும் மனப்பான்மை காணப்படுவதில்லை. அன்றாடம் கிடைக்கும் வருவாயை அன்றே செலவும் செய்து மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்தி வருகின்றனர். காடர்கள் யார் என்பது அவர்களின் தொழில்கள், உணவுமுறை, உடை, இருப்பிடம் போன்றவும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

**பார்வை நூல்கள்**


- சி. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை, 1990.
- வாழ்வியல் களஞ்சியம் தொகுதி -7, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1956.
- அபிதான சிந்தாமணி.
- சி. பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், மணிவாசகர் பதிப்பகம்.
- சு.சக்திவேல், பழங்குடிகள் - செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1973.
- தென்னிந்திய குலங்களும் குடிகளும், தொகுதி 7 - எட்கர் தர்ஸ்டன்

(தமிழில் இரத்தினம்), தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 1987.

- கழகத் தமிழ் அகராதி, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை, 1996.
- மலைபடுகடாம், நச்சினார்க்கினியர் உரை.
- அகநானூறு, களிற்றியானைநிரை.